**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மானாமதுரை.**
**முன்னிலை: திரு.S. முகம்மது யூசுப் நவாஸ், B.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மானாமதுரை.**

**2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**இடைக்கால மனு எண். 2/2022**
**இன்**
**அசல் வழக்கு எண். 80/2022**

1. K.கருப்பையா
2.K.கலைகுமார்
3.M.ராகவன்
4.G.மாரிமுத்து
5.M.சேது அரவிந்தன்
6.M.இராமநாதன்
7.S.நாகராஜன் .... மனுதாரர்கள்/வாதிகள்

/ எதிர் /

1.S.M.தமிழ்செல்வம்
2.C.சோமசுந்தரம் .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என்முன்பு 12.11.2025 தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.சரவணன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.கணேசன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

**1.** இம்மனுவில் மனுதாரர்கள் தரப்பில் சிபிசி ஆர்டர் 26, ரூல் 9ன் கீழ் தாவா தீப்பாய்ந்த அம்மன் ஸ்ரீ வீரசின்னம்மாள் திருக்கோவிலை பார்வையிட்டு அதன் இயற்கை அமைப்பு மற்றும் உண்மைத்தன்மை ஆகியவற்றை வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்திட நீதிமன்ற வழக்கறிஞர் ஒருவரை ஆணையராக நியமனம் செய்து உத்தரவிட வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம்:**

தாவா தீப்பாய்ந்த அம்மன் ஸ்ரீ வீரசின்னம்மாள் திருக்கோவிலானது மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் மூதாதையர்களால் 100 ஆண்டுகளுக்கு

முன்பு நிறுவப்பட்ட தனியார் கோவில் என்றும், பல ஊர்கள் மற்றும் வெளிநாடுகளில் வசிக்கும் ஆசாரி சமூகத்தை சேர்ந்த 120 குடும்பங்களை சேர்ந்த பங்காளிகளால் வழிபடப்படுகிறது என்றும், தாவா கோவில் விஸ்தீர்ணம் 1 ஏக்கர் 16 செண்ட் இடமானது கிருஷ்ணசாமி ஆசாரிக்கு பாத்தியமானது என்றும், கிருஷ்ணசாமி ஆசாரி இறந்தபிறகு அவரது மகன் மீனாட்சிசுந்தரம் என்பவர் சமூகம் நீதிமன்றத்தில் OS.No.317/1956 என்ற பாகப்பிரிவினை வழக்கு தொடர்ந்து, அதில் இறுதிநிலை தீர்ப்பாணை மனு IA.No.745/1958-ன் உத்தரவு படி 3 ஏக்கர் 16 செண்டில் மேற்படி கோவிலுக்காக 1 ஏக்கர் 16 செண்ட் ஒதுக்கப்பட்டதாகவும், மனுதாரர்கள் உட்பட 120 பங்காளிகள் ஒவ்வொரு வருடமும் மாசி மாதம் குலதெய்வமான தீப்பாய்ந்த அம்மன் ஸ்ரீ வீரசின்னம்மாள் திருக்கோவிலில் 14 பீடம்கள் மற்றும் நீண்ட அருவாளை ஆகியவற்றை வழிபட ஒன்று கூடுவார்கள் என்றும், மேற்படி கோவிலின் பராமரிப்பிற்காக நன்கொடை பணம் 2ம் பிரதிவாதியிடம் கொடுக்கப்பட்டு, அவர் செலவு சம்பந்தப்பட்ட கணக்குகளை சமர்ப்பிப்பார் என்றும், 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதியுடன் கூட்டு சேர்ந்து கிருஷ்ணசாமி ஆசாரியின் பேரபிள்ளையை சாதகமாக பயன்படுத்திக் கொண்டு மனுதாரர்கள் மற்றும் பங்காளிகள் மேற்படி கோவிலில் வழிபடுவதை தடுக்க முயற்சிப்பதாகவும், தாவா கோவில் 2ம் பிரதிவாதியால் பூட்டப்பட்டுள்ளதால் கோவிலின் தூய்மை பாதிக்கப்பட்டு பராமரிப்புயின்றி உள்ளதாகவும், பூஜைகளும் செய்யப்படவில்லை என்றும், தாவா கோவிலில் மனுதாரர் தகப்பனார் கந்தசாமி ஆசாரியால் ஏற்படுத்தப்பட்ட 14 பீடங்களை அகற்றவும், தாவா கோவிலின் அமைப்பினை மாற்றவும் எதிர்மனுதாரர்கள் தீவிரமாக முயற்சித்து வருவதாகவும், எனவே தாவா கோவிலை பார்வையிட்டு அதன் இயற்கை அமைப்பு மற்றும் உண்மைத்தன்மை ஆகியவற்றை வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்திட நீதிமன்ற வழக்கறிஞர் ஒருவரை ஆணையராக நியமனம் செய்ய உத்தரவிட வேண்டி மனுதாரர்களால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>3. எதிருரையின் சுருக்கம் :</u>

தாவா கோவில் பூமியில் உள்ளது என்பதை எதிர்மனுதாரர்கள் ஒப்புக்கொண்டுள்ளநிலையில், தாவா மனு அவசியமற்றது என்றும், தாவா வழக்கை தடம் மாற்றம் செய்ய வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், தாவா வழக்கிற்கு நீதிமன்ற ஆணையர் நியமனம் என்பது அவசியமற்ற ஒன்றாகும் என்றும், எனவே தாவா மனு தள்ளுபடி செய்யக்கூடியது என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** இருதரப்பிலும் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் இல்லை.

**5. இம்மனு அனுமதிக்கத்தக்கதா/இல்லையா என்பதேயாகும்:-**

**5.1.** இந்நிலையில் இவ்வழக்கில் வழக்கறிஞர் ஆணையர் நியமிக்கப்பட்டு தாவா கோவிலை பார்வையிட்டு அதன் இயற்கை அமைப்புத்தன்மையை (physical features) தாக்கல் செய்தால் தான் இவ்வழக்கில் முறையாக முடிவு செய்ய இயலும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**5.2.** மேலும் எந்தெந்த சூழ்நிலைகளில் வழக்கறிஞர் ஆணையரை நியமிக்க வேண்டும் என்ற மேன்மை பொருந்திய மதுரை உயர்நீதிமன்ற வழக்கை "The Madurai Bench of Madras High Court, Dated.26.09.2019, CORAM:THE HONOURABLE MR.JUSTICE N.ANAND VENKATESH, CRP PD (MD) NO.970 OF 2012 and MP(MD) No.1 of 2012" கருத்தில் கொண்டு இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**5.3.** எனவே வழக்கறிஞர் **திரு.K.சண்முகசுந்தரம், B.A. B.L.,** அவர்களை வழக்கின் வழக்கறிஞர் ஆணையாளராக நியமித்து தாவா கோவிலை பார்வையிட்டு, அதன் தற்போதைய இயற்கை அமைப்பு, சொரூபநிலை, உண்மைத்தன்மை ஆகியவற்றை புகைப்படம் எடுத்து வரைபடத்துடன் கூடிய தெளிவான அறிக்கையை தாக்கல் செய்ய உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

மேலும் மனுதாரர் வழக்கறிஞர் ஆணையாளர் கட்டணமாக ரூ.10,000/- இம்மனு உத்தரவு தேதியிலிருந்து 7 நாட்களுக்குள் வழக்கறிஞர் ஆணையர் வசம் வழங்கி அதற்குரிய ஆதாரத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்படி உத்தரவிடப்படுகிறது.

**இறுதியாக வழக்கறிஞர் திரு.K.சண்முகசுந்தரம், B.A. B.L., அவர்களை இந்த வழக்கின் வழக்கறிஞர் ஆணையாளராக நியமித்து தாவா கோவிலை பார்வையிட்டு 10.12.2025ம் தேதிக்குள் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டு இம்மனு செலவுதொகையின்றி அனுமதிக்கப்படுகிறது. அழைக்க:- 10.12.2025.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025ம் நவம்பர் 14-ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.11.14 04:47:55 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

மனுதார்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் - இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் - இல்லை

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.11.14 04:48:04 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

**DISTRICT MUNSIF COURT**
**MANAMADURAI**

# ORDER

**I.A.No. 2/2022**

**in**

**OS. No.80/2022**

**Dated: 14.11.2025**

எனவே வழக்கறிஞர் திரு.A.கருப்பையா **B.Com. B.L.,** அவர்களை வழக்கின் வழக்கறிஞர் ஆணையாளராக நியமித்து மனுச்சொத்தை பார்வையிட்டு, வருவாய்த்துறை ஆவணங்கள் மற்றும் இருதரப்பு ஆவணங்களின் அடிப்படையில் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் சர்வேயர் உதவியோடு இருதரப்பினருக்கும் கட்டுப்பட்ட சொத்தை புலத்தணிக்கை செய்தும், தாவா சொத்தில் தற்போதைய அளவுகள், இயற்கை அமைப்பு, சொரூபநிலை, உண்மைத்தன்மை ஆகியவற்றை புகைப்படம் எடுத்து வரைபடத்துடன் கூடிய தெளிவான அறிக்கையை தாக்கல் செய்ய உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.